# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 25/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு அக்டோபர் மாதம் 22 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாரதி | மதம் | : இந்து |
| க/பெ | : ரமேஷ் | ஜாதி | : -- |
| வயது | : 41 | கிராமம் | : தெக்களூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

22.10.2024

<u>வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் என் கணவரை கேட்டால்தான் தெரியும். இந்த வழக்கின் வாதி என் கணவர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் என் அப்பாவின் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். வாதி அழைத்துதான் நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். நான் குழந்தையாக இருந்தபோது நாங்களும் பிரதிவாதிகளும் ஒன்றாக ஒரே வீட்டில் இருந்தோம் என்றால் நாங்கள் எப்போதும் ஒன்றாக இருந்ததில்லை. என் அப்பா பெயர் நடேசன் என்றால் சரிதான். என் அப்பாவின் உடன் பிறந்தவர்கள் 2 ஆண், 3 பெண்கள் என்றால் சரிதான்.

2. என் அப்பாவிற்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் வருடம் தற்போது ஞாபகமில்லை. எத்தனை வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது என்றால் 1978 ஆக இருக்கும். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 1980க்கு பின்புதான் என் அப்பாவிற்கு திருமணம் ஆனது என்றாலும் சரியல்ல. என் அப்பாவிற்கு திருமணம் நடந்த பின்புதான் என் அப்பாவின் உடன் பிறந்தவர்களுக்கு திருமணம் நடந்தது என்றால் அதற்கு முன்பே என்

அப்பாவின் சகோதரி ஒருவருக்கு திருமணம் நடந்திருந்தது. திருமணத்தின்போது என் அப்பா வீட்டில் அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்தனர் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பும் என் அப்பா வீட்டில் அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்தனர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எந்த வருடம் வாங்கினார்கள் என்றால் 1978, 1992 அதற்கு பின்பு ஞாபகமில்லை.

3. வழக்கு சொத்து இல்லாமல் திருத்தணி வெளிசுற்று சாலையில் ஒரு வீட்டு மனையும் என் அப்பா கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். என் அப்பாவின் திருமணத்திற்கு முன்பு பிரதான சொத்துக்கள் மற்றும் வழக்கு சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. என் அப்பா என்ன படித்துள்ளார் என்றால் 6ம் வகுப்பு வரை படித்துள்ளார். மேற்படி சொத்துக்கள் வாங்க என் அப்பாவிற்கு என்ன வருமானம் இருந்தது என்றால் என் அப்பா அவர் மாமியாரிடமிருந்து பணம் வாங்கியுள்ளார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. என் அப்பாவின் மாமியார் 7 பவுன் நகை கொடுத்துள்ளார். நான் சொல்வதுபோல் மாமியார் நகை பணம் கொடுத்ததாக கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதை எப்படி குறிப்பிடுவார்கள்.

4. என் அப்பாவிற்கு தனிப்பட்ட வருமானமோ சொத்து வாங்கும் அளவு விவரமோ இல்லை என்றாலும் சரியல்ல. என் அப்பா தன் சுயசம்பாத்தியத்தில் தான் சொத்தை கிரையம் வாங்கினார் என்பதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் அசல் ஆவணங்கள் மற்றும் என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் அனுபவம் ஆதியில் இருந்து எங்களிடம்தான் இருந்தது என்பதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாகப்பிரிவினை செய்யாத கூட்டு குடும்ப சொத்து என்பதால்தான் அசல் கிரைய ஆவணங்கள் என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றால் நாங்கள் இரும்பு

அலமாரியில் வைத்து இருந்த ஆவணங்களை பிரதிவாதிகள் எடுத்து சென்றுவிட்டார்கள். அவ்வாறு ஆவணங்களை எடுத்து சென்றதை பற்றி பிராதில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் குறிப்பிட்டுள்ளோம். என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 1995 ல் இருந்தார். மாதம் ஞாபகமில்லை. என் அப்பாவின் வாரிசு சான்றிதழ் எப்போது வாங்கினேன் என்றால் தேதி மாதம் ஞாபகமில்லை.

5. நாங்கள் 24.02.2014 ம் தேதியிட்டு சுமார் 19 ஆண்டுகள் கழித்து எதற்காக வாரிசு சான்றிதழ் பெற்றோம் என்றால் என் அம்மாவிற்கு போதுமான விவரம் இல்லை என்பதால் நாங்கள் வாங்கினோம். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பாகப்பிரிவினை செய்யப்படாத கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றாலும் இல்லை. என் அப்பா எவ்வாறு இறந்தார் என்றால் உடல்நிலை சரியில்லாமல் இறந்தார். நான் சொல்வது பொய் என்றாலும் பொது கிணறு தோண்டும்போது தவறி விழுந்து அடிப்பட்டு மருத்துவ சிகிக்சையில் இருந்து இறந்துவிட்டார் என்றால் கிணற்றில் விழுந்து அடிப்பட்டு உடல்நிலை சரியாகிவிட்டது. மீண்டும் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார்.

6. உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது அவரது உடன்பிறந்தவர்கள்தான் அவரை பார்த்துகொண்டு முழுவதுமாக செலவு செய்து சரி செய்தனர் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு வாரிசு சான்றிதழ் வாங்கும்போது என் பாட்டி அமிர்தம்மாள் உயிருடன் இருந்தார் என்றால் ஆமாம். நாங்கள் சென்று அழைத்தோம் அவர் வரவில்லை. நீங்களே சென்று எழுதி கொள்ளுமாறு சொல்லிவிட்டார். வாரிசு சான்றிதழில் ஏன் என் பாட்டி பெயரை சேர்க்கவில்லை என்றால் அவர் நான் வரவில்லை என்று சொல்லிவிட்டார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7 வாரிசு சான்றிதழ் நாங்கள்தான் வாங்கினோம் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ 7 ஆவணத்தில் ப.மு.எண். என்பதில் வருடம் 2014 என்பதை 2013 ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளதில் திருத்தம் செய்தவரின் கையெழுத்தோ மேற்குறிப்போ இல்லை என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ 7

வாரிசு சான்று பட்டா மாறுதலுக்கு மட்டுமே என குறிப்பிடப்பட்டுள்ளதில் இதை வைத்து நாங்கள் எவ்வாறு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதினோம் என்றால் தெரியவில்லை. வட்டாட்சியரை நீதிமன்றத்திற்கு அழைத்து வா.சா.ஆ 7 வாரிசு சான்றிதழின் உண்மைத்தன்மையை நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

8. வா.சா.ஆ 7 வாரிசு சான்றிதழ் எங்களால் மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் இல்லை. எனக்கு எழுதி கொடுக்கப்பட்ட வா.சா.ஆ 1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் பாட்டி கையெழுத்து செய்துள்ளாரா என்றால் என் பாட்டி சொத்தை எங்களை எடுத்து கொள்ள சொல்லிவிட்டதால் கையெழுத்து செய்யவில்லை. மகனுடைய சொத்தில் முதல்நிலை வாரிசுதாரரான பாட்டிக்கு உரிமையுள்ளது என்றாலும் அவரை நீக்கி தயார் செய்யப்பட்டுள்ள ஆவணம் சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. நான் வீட்டை எதிர்த்துகொண்டுதான் காதல் திருமணம் செய்தேன் என்றால் வீட்டை எதிர்த்து செய்யவில்லை. என் அப்பா இறந்த பின்பு யாரும் எங்களை பார்த்து கொள்ளவில்லை. நாங்களேதான் விருப்பப்பட்டு திருமணம் செய்துகொண்டோம். என் அக்கா வீட்டில்பார்த்த மாப்பிளையை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.

9. என் அக்கா வீட்டில்பார்த்த மாப்பிளையை திருமணம் செய்து கொண்டார் என்றாலும் நான் காதல் திருமணம் செய்து கொண்ட நிலையில் எனக்கு மட்டும் ஏன் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார்கள் என்றால் என் அக்காவிற்கு என் தாத்தா பாட்டி இருந்து செலவு செய்து திருமணம் செய்தார்கள். எனக்கு எதுவுமே செய்யவில்லை என்பதால் சொத்து எழுதி வைத்தார்கள். தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து என்பதை என் அக்காவிற்கு நன்கு தெரியும் என்பதால்தான் அவர் ஆவணம் எதையும் எழுதி கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

10. வழக்கு சொத்தில் பின்னால் பிரச்சனை வரும் என்பதால்தான் என் அக்கா ஆவணம் எதையும் எழுதி கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான்

சொத்தை செட்டில்மெண்ட் பெற்றவுடன் என் கணவருக்கு ஏன் செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால் என் கணவர் கிரையம் பெற்ற சொத்தை என் பெயருக்கு எழுதி வைத்திருந்தார். எனவே இந்த சொத்தை நான் அவருக்கு எழுதி கொடுத்தேன். 2, 3 ஆவணங்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எங்களால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் சட்டத்திற்கு புறம்பானது என்பதால் நீதிமன்றத்திற்கு அலைய வேண்டி இருக்கும் என்ற காரணத்திற்காக தான் நான் என் கணவருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால் இல்லை.

11. என் அம்மாவையும் அக்காவையும் அழைத்து விசாரணை செய்தால்தான் என் அப்பாவிற்கு என்ன வருமானம் இருந்தது சொத்தை எப்படி கிரையம் பெற்றார் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. அமிர்தம்மாள் கையெழுத்திடாத செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. என் சாட்சியம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. என் அப்பா கிணற்றில் விழுந்து அடிப்பட்டு சரியானதாக நான் சொல்லியுள்ளதில் என் அப்பாவிற்கு உடல்நிலை சரியான பின்பு என் அப்பா ஏதேனும் ஆவணம் எழுதினாரா என்றால் என் அப்பாவிற்கு உடல் நிலை மிகவும் முடியாமல் இருந்ததால் ஆவணம் எழுதவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கூட்டு குடும்ப சொத்து என்பதால் என் அப்பா ஆவணம் எதுவும் எழுதவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என் கணவர் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டுள்ள இந்த வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)